# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு
# 01.10.2009 முதல் 31.10.2009 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 1. | 1.10.09 | **சிவகங்கை மாவட்டம்:** திருப்பத்தூர் அருகே சேவினிபட்டடியைச் சேர்ந்தவர் கருப்பன் இவர் தனது பட்டா நிலைத்தை தனது மருமகன் பெயருக்கு மாறுதலுக்கு உலகு சகோதரர் ராசுவுடன், சென்று வடக்கு இளையாத்தங்குடி வி.ஏ.ஓ.பஞ்சநாதனை அனுகியபோது 1500, லஞ்சம் வாங்கிய பஞ்சநாதனை லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸார் கைது செய்தனர். | லஞ்ச ஊழல் | தினகரன் |
| 2. | 1.10.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** ஸ்ரீவைகுண்டம் செய்துர்பக நல்லூர் முஸ்லீம் புதுத்தெருவைச் சேர்ந்த முசாம்பிஸ் இவர் முகைதீன் ஜாபிலா பள்ளி வாசலுக்கு தொழுகையில் குரானை மட்டும் பின்பற்றும் முறையில் வழிபாடு நடத்தியதால் இவரை அக்கிராம மக்கள் அப்பள்ளிவாசல் செயலாளர் முகமதுஅலி இவரது குடும்பத்தை ஊரை விட்டு ஒதுக்கி வைத்தார் இது குறித்து முசாம்பிஸ் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் மனு கொடுத்தார் கோர்ட் இம்மனுவிற்கு பதிலளித்து தூத்துக்குடி கலெக்டர் மற்றும் எஸ்.பிக்கு நோட்டிஸ் அனுப்பா உத்தரவு விட்டார். | சமூக புறக்கணிப்பு | தினகரன் |
| 3. | 1.10.09 | **மதுரை மாவட்டம்:** திண்டுக்கல் மாவட்டம், சூலக்கோட்டை அருகேயுள்ள முருகத்தூரன்பட்டியைச் சேர்ந்த ஜான்கென்னடி, உறங்கான்பட்டியைச் சேர்ந்த இனமனூர் முருகன் என்பவரும் சேர்ந்து ஜே.சி.பி, இயந்திரம் மூலம் தொழில் செய்து வருகின்றனர், இவர்கள் வரிச்சூர் அருகே அனுமதி இல்லாமல் ஜே.சி.பி. மூலம் கிரானைட்கற்களை ஏற்றி சென்றவர்களை கனிமவனத்துறை அதிகாரி பிடித்து அபாரத்தொகையை மதுரை R.D.O.விடம் செலுத்தியும் ஜே.சி.பி. இயந்திரத்தை திருப்பி ஒப்படைக்க மதுரை வடக்கு தாலுகா அலுவலகத்தில், பணிபுரியும் துணை தாசில்தார் கண்ணதாசன் மற்றும் உதவியாளர் சந்திரன் ஆகியோர் 3 ஆயிரம் லஞ்சம் வாங்கிய இருவரையும் லஞ்ச ஒழிப்புத்துறை காவலர்களால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினகரன் |
| 4. | 1.10.09 | **விழுப்புரம் மாவட்டம்:** திருக்கோவிலூர் அருகே காங்கியனூர் கிராமத்தில் உள்ள திரவுபதியம்மன் கோவிலில் நடந்த தீ மிதி விழாவில் அப்பகுதி தலீத் மக்களை ஆலயத்துக்குள் நுழைய அனுமதி செய்யக்கோரி | தலீத் எதிராக வன்முறை<br>காவல்நிலைய வன்முறை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | தீண்டாமை ஒழிப்பு முன்னனி மற்றும் மார்க்சிஸ்ட் கட்சி சேர்ந்து போராட்டம் நடத்துவதில் ஏற்பட்ட மோதலில் மார்க்சிஸ்ட் கட்சியை சேர்ந்த சுமார் 100பேரை போலீஸார் கைது செய்தனார் அம்மோதலில் 3 காவலர்களுக்கு காயம் | | |
| 5. | 1.10.09 | **நாகை மாவட்டம்:** வேதாரண்யம் அடுத்த செட்டிப்புலத்தில் ஏகாம்பரேஸ்வரர் காமாட்சி அம்மன் கோவில் நுழைவு போராட்டத்தில் ஈடுபட்ட மார்க்சிஸ்ட் எம்.எல்.ஏ மாரிமுத்து உட்பட நூற்றுக்கு மேற்பட்டோரை போலீஸார் கைது செய்தனர் | தலீத் எதிராக வன்முறை காவல்நிலைய வன்முறை | தினகரன் |
| 6. | 1.10.09 | **மதுரை மாவட்டம்:** எஸ்.எஸ்.காலனி சட்டம் ஒழுங்கு பிரிவு இன்ஸ்பெக்டர் ஆதிவீரராமபாண்டியன் மற்றும் எஸ்.எஸ்.காலனி காவல் நிலையத்தில் பணிபுரிந்த ஏட்டு கண்ணன் ஆகிய இருவரும் குற்றவாளியை விடுவிக்க லஞ்சம் வாங்கிய இருவரையும் லஞ்ச ஒழிப்புத்துறை காவலரால் கைது செய்து சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். | லஞ்ச ஊழல் | தினகரன் |
| 7. | 1.10.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** சாயல்குடி அருகே உள்ள வி.வி.ஆர் நகரில் பத்திரகாளியம்மன் கோவில் முளைப்பாரி விழா நடந்தது. அம்முளைப்பாரியை நீரிப்பையூர் கடலில் கரைக்க அனுமதி மறுத்ததால் ஏற்பட்ட மறியலில் ஈடுபட்டனர், இதனை தடுக்க போலீஸ் தடியடி நடத்தினர், அதில் 4பேர் கைது செய்யப்பட்டனர். | காவல்நிலைய வன்முறை | தினத்தந்தி |
| 8. | 1.10.09 | **திருச்சி மாவட்டம்:** அரியலூர் மாவட்டம் சிலம்பனூரைச் சேர்ந்த பஞ்சநாதன் மகன் மதியழகன் இவர் மூட்டு வலிக்கு சிகிச்சை எடுக்க திருச்சி அரசு மருத்துவமனை எம்.ஆர்.ஐ.ஸ்கேன் எடுக்க உதவியாளார் பரமேஸ்வரன் 2500 ரூ லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஒழிப்புத்துறை காவலர்களால் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினத்தந்தி |
| 9. | 1.10.09 | **கோவை மாவட்டம்:** ஆவாரம் பாளையத்தில் உள்ள கட்டிட இடத்தினை, தனியார் அறக்கட்டளை நிர்வாகமான தாமேதிரம் தர்மஸ்தாபனத்தின் கீழ் உள்ளது. இதனை எதிர்த்து அப்பகுதி மக்கள் அப்பள்ளி கட்டிடத்தினை மாநகராட்சி கைபடுத்த வேண்டும் என்று மாக்சிஸ்ட் கட்சியினர் போராட்டம் நடத்தியபோது போலீஸார் தாக்குதல் நடத்தினர் இதில் 21 பேரை காவலர்கள் கைது செய்தனர் | | தீக்கதிர் |
| 10. | 2.10.09 | **மதுரை மாவட்டம்:** தேனி மாவட்டம், வடமலை குண்டு அருகே உள்ள கருப்பையாபுரம் பாண்டியம்மாள் என்ற | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெண்ணுக்கு மதுரை அரசு மருத்துவமனையில் பெண் குழந்தை சத்து குமறைவாக பிறந்ததால், பாண்டியம்மாள் குடும்பத்தினர் அக்குழந்தையை மருத்துவமனையில் விட்டு சென்றனர் அக்குழந்தை சிகிச்சை பலனளிக்காமல் இறந்தது. இது குறித்து மருத்துவமனை காவல் நிலையத்தில் புகார். | | |
| **11.** | 2.10.09 | **மதுரை மாவட்டம்:** கருமாத்தூர் பகுதியில் உள்ள ரேஷன் கடையில் இருந்து அனுமதியின்றி சுமார் 50 கிலோ எடை கொண்ட 50மூடை அரிசி பறிமுதல் | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |
| **12.** | 2.10.09 | **அரியலூர் மாவட்டம்:** உடையார் பாளையம் வட்டம் பெரியகிருஷ்ணபுரம் கிராமத்தில் பல்லாண்டு காலமாக தலீத் மக்களுக்கு டீக்கடைகளில் தனி டம்ளரீல் டீ வழங்கப்பட்டு வந்தது. இதனை எதிர்த்து தீண்டாமை ஓழிப்பு முன்னனி சார்பாக நடைபெற்ற போராட்டம் வெற்றி பெற்றதுழு | தலீத் எதிரான வன்முறை | தீக்கதிர் |
| **13.** | 2.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** பெருமாள் சேரியைச் சேர்ந்த ராக்கப்பன், இவரது மனைவி பழனியம்மாள் இருவருகிடையே கருத்து வேறுபாட்டினால் பிரிந்து வாழ்ந்து வந்தனர், பழனியம்மாளுக்கும் மாரிகுருக்கும் பழக்கம் ஏற்பட்டு வாழ்ந்து வந்தனர் இந்நிலையில் மாரிகுரு பழனியம்மாள் அக்காள் மகளை திருமணம் செய்துகொண்டார், பழனியம்மாள் கஷ்டபட்டநிலையில் மாரிகுருவிடம் செலவுக்கு பணம் கேட்டபோது மாரிகுரு பழனியம்மாள் மேல் மண்ணென்ணெய் உற்றினார் தீ வைத்தார். இது குறித்து டவுண் இன்ஸ்பெக்டர் வழக்கு பதிவு செய்து மாரிகுருவை கைது செய்தார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| **14.** | 2.10.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** நிலக்கோட்டை சேர்மன் சங்கரன் நகரில் வசிப்பவர் நாகலிங்கசேது மகள் ராஜேஸ்வரி(40), இவருக்கும் திருமங்கலத்தைச் சேர்ந்த செல்லையா மகன் மகேந்திரன் திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ளன. கணவன் மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனையில் இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகின்றனர் இந்நிலையில் மகேந்திரன் தன் நன்பருடன் மனைவி வீட்டில் சென்று விவாகரத்து கேட்டு குழந்தைகள் கடத்திச் சென்றார், இது குறித்து நிலக்கோட்டை போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| **15.** | 2.10.09 | **சேலம் மாவட்டம்:** சேலம் ஆயுதப்படையில் பணி செய்யும் பெண் போலீசாரிடம் இரவு நேரங்களில் தணிக்கை என்ற பெயரில் எஸ்.ஜக்கன் சிலர் பாலியல் தொந்தரவு கொடுப்பாதாக டி.ஜி.பிக்கு புகார் | காவல்நிலைய வன்முறை பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அனுப்பப்பட்டுள்ளது. இது குறித்து உயர் அதிகாரிகள் விசாரனை | | |
| 16. | 2.10.09 | **நெல்லை மாவட்டம்:** கலிக்காடு பள்ளிக்குளத்தைச் சேர்ந்த சுதன் இவர் தன் நிலத்தை பெயர் மாற்றக்கோரி கள்ளிகுளம் வி.ர.ஒ. ராஜலிங்கத்திடம் விண்ணப்பித்தபோது லஞ்ச ஒழிப்பு துறை காவலர்களால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினமலர் |
| 17. | 3.10.09 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே லிங்கநாயக்கன்பட்டியில் உள்ள தூர்க்கையம்மன் கோவிலில் பெண் பூசாரி பின்னியம்மாள் வழிபாடு நடத்த எதிர்ப்பு கோவிலுக்கு செல்லும் வழிகளில் மூட்களை வெட்டிப்போட்டு அடைத்தும் போலீஸாரை ஊருக்குள் நூழைய விடாமல் தடுத்தும் பொது மக்கள் போராட்டம் நடத்தினர் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 18. | 3.10.09 | **சென்னை மாவட்டம்:** வடபழனி பஜனைக் கோவில் தெருவைச் சேர்ந்தவர் சாமுவேல் அண்ணாநகர் இவர் 74வது கோட்ட மாநகராட்சி சுகாதார ஆய்வாளர் இவர் காஞ்சிபுரம் மாவட்டம் சேர்ந்த மணவாளன் துப்புரவு தொழிலாளரான இவரிடம் சம்பள உயர்வு வாங்கிதருவதாக கூறி 2500 ரூ லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஒழிப்புத்துறை காவலரால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினமலர் |
| 19. | 4.10.09 | **மதுரை மாவட்டம்:** காமராஜபுரத்தைச் சேர்ந்தவர் ராமன் இவரது மகள் பானு இவர் தன் குடும்ப ஏழ்மையின் காரணமாக உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலை செய்து கொண்டார் இது குறித்து கீரதுரை போலீஸார் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்முரசு |
| 20. | 4.10.09 | **தேனி மாவட்டம்:** ஆண்டிப்பட்டி போலீஸ் சரகம் ஜக்கம்பட்டியைச் சேர்ந்தவர் சுப்பையா இவரது மகள் பூர்ணிமா, இவர் கல்லூரி மாணவி, இவரை ஒத்தக்கோவிலைச் சேர்ந்த ராணுவ வீரர் பரமன், கடத்தியதாக ஆண்டிப்பட்டி காவல்நிலையத்தில் புகார்., போலீஸ்க்கு பயந்து பரமன் விஷம் குடித்தார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலை மலர் |
| 21. | 4.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி ஒன்றியம் ஆனையூர் கட்டளைப்பட்டி கிராமத்தில் தலீத் அருந்ததியர் மக்கள் பொதுக் கழிப்பறையை பயன்படுத்தவும் பொதுச் சாவடியை பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டிருந்தது இதனைக் கண்டித்து தீண்டாமை ஒழிப்பு முன்னனி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் நடத்திய போராட்டத்தின் மூலம் தகர்த்தப்பட்டது | தலீத் எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 22. | 4.10.09 | **மதுரை மாவட்டம்:** கீழவெளிவீதியைச் சேர்ந்தவர் பிஸ்மீலூர் தில்லா இவருக்கும் | பெண்களுக்கு எதிரான | தமிழ்முரசு |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | சென்னையைச் சேர்ந்த பொறியியல் மாணவரான செய்யது பாட்ஷாவிற்கும் மிடையே கடந்த 2007ல் திருமணம் நடந்தது. செய்யது குடும்பத்தினர் பிஸ்மியிடம் 200 பவுண் நகை கேட்டு துன்புறுத்தியதாக மதுரை டவுண் போலீஸில் புகார். | வன்முறை | |
| 23. | 5.10.09 | **சிவகங்கை மாவட்டம்:** இலங்கையைச் சேர்ந்தவர் ஜெயராணி(28) இவர் 8 ஆண்டுகளுக்கு முன்பு குவைத் நாட்டில் உள்ள ஒரு மருத்துவமனையில் நர்சு வேலைக்கு சென்றார். அதே மருத்துவமனையில் சிவகங்கைச் சேர்ந்த முருகன் வேலை செய்தார், முருகன் திருமணம் செய்து கொள்வதாக கூறி நெருங்கி பழகியுள்ளார். ஜெயராணியின் கட்டாயப்படுத்தியதால் தாலியை கட்டிவிட்டு முருகன் தலைமறைவு ஆனார். இது குறித்து கொல்லங்குடி காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 24. | 6.10.09 | **மதுரை மாவட்டம்:** காமராஜர் சாலை சௌராஷ்டிர மேல்நிலைப்பள்ளி பின்புறம் தூமாட்டி ரெங்கசாமி அய்யன் சந்து, இப்பகுதியில் கொண்டிதொழு வடக்குத் தெரு சந்திப்பில் தேவர் சிலையை போலீஸ் அனுமதி பெறாமல் வைத்துள்ளனர் சிலையை போலீஸார் அகற்றினர் இதனை எதிர்த்து திமு.க. கவுன்சிலர் செந்தில் உள்ளிட்டோர்.. தகராறு செய்ததால் சிலர் கல்வீசியதில் ஒரு பெண் போலீஸாருக்கு காயம் போலீஸ் தடியடி நடத்தியதில் ஒருவர் காயம். | காவல்நிலைய வன்முறை | தினமணி |
| 25. | 6.10.09 | **மதுரை மாவட்டம்:** மதுரை வேனில் கடத்தப்பட்ட 500 மூட்டை ரேஷன் அரிசியை போலீஸார் திங்கட்கிழமை இரவு பறிமுதல் | ரேஷன் அரிசி கடத்தல் | தினமணி |
| 26. | 6.10.09 | **விழுப்புரம் மாவட்டம்:** ஊளுந்தூர் பேட்டை அடுத்த களமருதூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் உதவி தலைமை ஆசிரியராக பணியாற்றி வருபவர் மந்திரி இவர் இப்பள்ளியில் படிக்கும் 6ம் வகுப்பு மாணவன் ஆனந்தபாபுவிடம் ஹேமோ செக்ஸ் டார்ச்சர் கொடுத்துள்ளார் இது தொடர்பாக சி.இ.ஒ. குப்புசாமி சஸ்பெண்ட் உத்தரவு கொடுத்துள்ளார். மற்றும் ஆசிரியரை போலீஸார் கைது செய்துள்ளனர். | பள்ளி வன்முறை | தினமணி |
| 27. | 6.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே தொத்தன்குளம் ஊராட்சியில் உள்ள வடக்காசியம்மன் கோவில் கும்பவிஷேகம் நடத்துவதில் ஏற்பட்ட பிரச்சனையில் இருதரப்பினரிடையே மோதல் ஏற்பட்டதில் 3பேர்க்கு அரிவாள் வெட்டு, 13 பேர்க்கு காயம் இது தொடர்பாக ஸ்ரீவில்லிபுத்தூர் டி.எஸ்.பி. வழக்கு பதிவு செய்து விசாரனை நடத்தி | சாதிய வன்முறை | தினமணி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | வருகிறார். | | |
| 28. | 6.10.09 | **மதுரை மாவட்டம்:** தெற்கு வாசல் பகுதியைச் சேர்ந்தவர் மகேஸ்வரி (22) இவரை அதே பகுதியை சேர்ந்த முத்துராஜ் அருண்பாண்டி இருவரும் மகேஸ்வரியை கேலி கிண்டல் செய்துள்ளார் இது குறித்து தெற்கு வாசல் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 29. | 7.10.09 | **மதுரை மாவட்டம்:** கொட்டாம்பட்டி அருகே உள்ள மனப்பச்சேரி ஊராட்சியைச் சேர்ந்த வல்லவன்(320 இவரது சகோதரிகள் இருவருக்கும் வீட்டுக்கு மீன் இணைப்பு பெற இருப்பிடச் சான்றிதழ் கேட்டு கிராம நிர்வாக அதிகாரி கருணாநிதி அணுகியபோது கருணாநிதி 600ரூ லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸாரால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினமணி |
| 30. | 7.10.09 | **சென்னை மாவட்டம்:** நூங்கம்பாக்கத்தில் லயோலா கலை அறிவியல் கல்லூரியில் முதுகலை பட்டப்படிப்பு மாணவ, மாணவிகள் கல்வி தொடர்பாக செங்கல்பட்டு அருகே உள்ள கிராமத்துக்கு சுற்றுலா சென்ற போது வயல்வெளியில் உள்ள பம்புசெட்டில் மாணவர்கள், மற்றும் மாணவி குறித்த காட்சியை செல்போனில் படம்பிடித்தாக 8 மாணவர்கள் மற்றும் ஒரு மாணவி சஸ்பெண்ட் செய்யப்பட்டார். | பள்ளி வன்முறை | தினத்தந்தி |
| 31. | 7.10.09 | **விழுப்புரம் மாவட்டம்:** சுரையூர் பகுதியில் உள்ள பேராலயத்தில் நடந்த திருவிழாவின் போது தலித் கிறிஸ்துவர்களை பேராலயத்தில் வழிபட வனியர் கிறிஸ்துவர்கள் தடைவிதித்ததால் அப்பகுதியில் உள்ள தலீத் கிறிஸ்துவர்கள் ஏரையூர் ஊரைவிட்டு வெளியேறினர். | தலீத் எதிரான வன்முறை | எக்ஸ்பிரஸ் |
| 32. | 8.10.09 | **கோவை மாவட்டம்:** தாராபுரம் அருகே உள்ள குண்டடம் பகுதியில் தொடர்ந்து வரும தீண்டாமை கொடுமைகளை உடனடியாக களைய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயி தொழிலாளர் சங்க தாலுகா பேரவை வலியுறுத்துகிறது | தலீத் எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 33. | 8.10.09 | **மதுரை மாவட்டம்:** சிலைமானில் உள்ள ஒரு ரேசன் கடையில் இருந்து 400 கிலோ ரேசன் அரிசியை கடத்தமுயன்ற போது பொதுமக்கள் மூலம் பிடிக்கப்பட்டு காவல் நிலையத்தில் ஒப்படைப்பு | ரேஷன் அரிசி கடத்தல் | தினமணி |
| 34. | 8.10.09 | **சேலம் மாவட்டம்:** காரிப்பட்டி நல்லான்பாறை ஒடை பகுதியில் ஒன்றரை வயது குழந்தையின் கை, கால், தலையை, வெட்டி நரபலி கொடுத்த கும்பலை போலீஸார் தேடுகின்றனர். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினமணி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 35. | 9.10.09 | **சென்னை மாவட்டம்:** வெளச்சேரி கன்னிகாபுரத்தைச் சேர்ந்தவர் அசோக்குமார் இவர் கிண்டி ஐ.ஐ.டியில் எம்.டெக் படித்து வருகிறார். இவரது வீட்டுக்கு துண்டிக்கப்பட்ட மீன் இணைப்பை மீண்டும் வழங்க கோரி மின்வாரிய அலுவலகத்தின் உதவி என்ஜீனியர் ராகராஜீ 2 ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஒழிப்புதுறை காவலர்களால் கைது செய்யப்பட்டார் | லஞ்ச ஊழல் | தினத்தந்தி |
| 36. | 9.10.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** கவர்னகிரியை சேர்ந்தவர் துரைபாண்டி, ஆட்டோ டிரைவர் இவருடைய மனைவி ரேவதி(22), இவரது தலை பிரசவம் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் இரட்டை பெண் குழந்தை பிறந்தது. முதல் பிரசவத்தில் இரண்டும் பெண்குழந்தைகள் என்ற அதிர்ச்சியில் ரேவதியும் அவரது தாயார் தேன்நிலவும் இரு பெண்குழந்தையை கழுத்தை திருகி கொலை செய்தனர் இது குறித்து தென்பாகம் காவல் நிலையத்தில் புகார். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 37. | 9.10.09 | **கேவை மாவட்டம்:** கோவை புலியகுளம் புனித அந்தோனியார் வீதியைச் சேர்ந்தவர் அமல்ராஜ் இவருடைய மனைவி ஸ்டெல்லா மேரி இவர் மேட்டுபாளையத்தில் உள்ள ஜி.ம். ஆர்.சி. அரசு உதவி பெறும் நடுநிலைப்பள்ளி ஆசிரியாராக வேலை பார்த்து வந்தார் இவருடைய பணி நிரந்தரத்துக்காக கோவை டவுண்ஹால் பகுதியில் உள்ள மாவட்ட தொடக்க கல்வி அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் பாலசந்திரன் 20,000, லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஒழிப்புத்துறை காவலர்களால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினத்தந்தி |
| 38. | 9.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை தெருவைச் சேர்ந்தவர் சகுந்தலா இவருடைய மகள் பிருந்தா இவர் அப்பகுதியில் உள்ள பள்ளியில் 9ம் வகுப்பு பயின்று வருகிறார். இவர் வீட்டின் அருகே வசிக்கும் முனியாண்டி மகன் சபரி(18) என்பவர் பிருந்தாவை மானபங்கம் செய்ய முயன்றதால் பிருந்தா எலி மருந்து சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து ராஜபாளையம் வடக்கு போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 39. | 9.10.09 | **மதுரை மாவட்டம்:** கொட்டாம்பட்டி அருகே உள்ள வீரசூடாமணிபட்டியைச் சேர்ந்தவர் ஆண்டிச்சாமி இவரது மகன் அருன் (எ) அருண்பாலன் இவர் திண்டுக்கல் மாவட்டம் சாணார்பட்டியில் உள்ள விடுதியில் தங்கி கொசுவம்பட்டியில் உள்ள பள்ளியில் 12ம் வகுப்பு பயின்று வந்தார். இவர் வயிற்றுவலியின் | பள்ளி வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காரணமாக அருண் மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலை செய்து கொண்டார் இது குறித்து கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் புகார். | | |
| 40. | 9.10.09 | **மதுரை மாவட்டம்:** அலங்காநல்லூர் அருகே உள்ள தண்டலை கிராமத்தைச் சேர்ந்தவர் கந்தசாமி இவரது மகள் தனபாண்டியம்மாள், இவரை அதே கிராமத்தைச் சேர்ந்த கூலித்தொழிலாளி விஜயகுமார் என்பவர் தனபாண்டியம்மாளை மானபங்கம் செய்ய முயன்றுள்ளார் இதனால் மனம் உடைந்த தனபாண்டியம்மாள் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து அலங்காநல்லூர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 41. | 9.10.09 | **மதுரை மாவட்டம்:** பேரையூர் தாலுகாவில் உள்ள எம்.கல்லூப்பட்டி மற்றும் அதன் சுற்றி உள்ள பகுதிகள் 125 உடல் ஊனமுற்றறோர்கள் இரண்டு முன்று வருடங்களுக்கு முன்பு விண்ணப்பித்த மனுக்களுக்கு இதுவரை உதவி தொகை கிடைக்காததை கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் முருகன் தலைமையில் சாலை மறியல் போராட்டம் நடத்திய ஊனமுற்றோர்களை காவலர்கள் கைது செய்தனர். | காவல் நிலைய வன்முறை | தினத்தந்தி |
| 42. | 9.10.09 | **மதுரை மாவட்டம்:** தத்தனேரி வைத்தியநாதபுரம் பகுதியைச் சேர்ந்தவர் செல்லையா மகன் பூபதி, இவர் செல்லூர் பகுதியில் ஒரு பள்ளி நடத்தி வருகிறார் இவர் சரவணன் என்பவரிடம் ஒரு இடத்தை கிராயம் செய்துள்ளார் இவருக்கும் ஆனையூர் பகுதியில் உள்ள ஜெயலட்சுமிக்கும் தகராறு ஜெயலட்சுமி தல்லாக்குளம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அப்போது பொறுப்பாக இருந்த இன்ஸ்பெக்டர் செல்லூர் குற்றபிரிவு இன்ஸ்பெக்டர் ரவீந்தரர், சரவணன் பூபதியை தாக்கி, பணம் 22 ஆயிரத்தையும் 2 செல்போன் பறித்தாக இருவரும் மதுரை ஐக்கோர்ட்டில் புகார். இது தொடர்பாக அக்காவலர்கள் மீது வழக்கு பதிவு செய்ய ஐக்கோர்ட் உத்தரவு. | காவல் நிலைய வன்முறை | தினத்தந்தி |
| 43. | 9.10.09 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** செய்யூர் தாலுகா சூணாம்மேடு கிராமத்தைச் சேர்ந்தவர் ராஜகோபால் இவரது மனைவி அமுதாவின் சொத்து தொடர்பாக முன்று ஆண்டுகளுக்கு சிட்டா அடங்கல் நகல் பெற ராஜகோபால் திண்டிவனம் தாலுகா அலுவலகத்திற்கு சென்றார், அங்கு பதிவரை எழுத்தர் ராமானுஜம் 500 ரூ லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஒழிப்புத்துறை காவலர்களால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| **44.** | 9.10.09 | **கடலூர் மாவட்டம்:** விழுப்புரம் மாவட்டம் கரடிசித்தூரைச் சேர்ந்தவர் அய்யம்பெருமாள் இவரது மனைவி தங்கம், கள்ளச்சாராய வியாபாரியான அய்யம் பெருமாள் கைது செய்யப்பட்டு கள்ளக்குறிச்சி கிளைசிறையில் விசாரனைக் கைதியாக அடைக்கப்பட்டிருந்தார் இடநெருக்கடி காரணமாக இவரை கடலூர் மத்திய சிறைசாலையில் விசாரனை கைதியாக கடந்த 5ம் தேதி மாற்றப்பட்டார். அங்கு வந்த சிறிது நேரத்திலேயே வயிற்று வலியால் துடித்து இறந்தார், இது குறித்து ஆர்.டி.ஒ. செல்வராஜ் விசாரனை செய்கிறார். | காவல்நிலைய மரணம் | தினகரன் |
| **45.** | 9.10.09 | **மதுரை மாவட்டம்:** எம்.கே.புரம் மெயின் ரோட்டைச் சேர்ந்தவர் வேன் டிரைவர் பாலகண்ணன் இவரது மனைவி ராதிகா, இவர் கூடுதல் வரதட்சனை கேட்டு துன்புறுத்தியதாக அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| **46.** | 9.10.09 | **மதுரை மாவட்டம்:** கரிமேட்டைச் சேர்ந்தவர் அப்துல்சலீம் தெற்கு வெளி வீதியைச் சேர்ந்தவர் சுனில்பாத்திமா இவரது கணவர் குடும்பத்தினர் கூடுதல் வரதட்சனை கேட்டதாக கரிமேடு போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| **47.** | 10.10.09 | **மதுரை மாவட்டம்:** சத்திரப்பட்டியைச் சேர்ந்த 21 வயது இளம்பெண்ணுக்கு சோலை ராஜீக்கும் காதல் ஏற்பட்டது. சேலைராஜீக்கு ஏற்கனவே திருமணம் ஆகி குழந்தை உள்ளது, தனக்கு திருமணம் ஆகவில்லை என்று கூறி திருமணம் செய்து கொள்வதாக கூறி ஏமாற்றி பாலியல் பலாத்காரம் செய்துள்ளார் இது குறித்து திருப்பரங்குன்றம் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| **48.** | 10.10.09 | **அரியலூர் மாவட்டம்:** குருவாலப்பர் கோவில் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி பாரதி தனது தாயர் தமிழரசி பெயருக்கு பவர் பத்திரம் பதிவு செய்ய லஞ்சம் கேட்ட சார்பதிவாளர், கோபானிடம் 500 ரூ கொடுத்தார். இவருக்கு உடந்தையாக எழுத்தர் காமராஜ் ஆகிய இருவரையும் லஞ்ச ஒழிப்புதுறை காவலர்களால் கைது செய்யப்பட்டனர். | லஞ்ச ஊழல் | தினமலர் |
| **49.** | 10.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை ஒன்றியம் செம்பட்டி அம்பேத்கர் காலனியில் சுடுகாடு மற்றும் பெண்களுக்கு கழிப்பறை வசதி இல்லை. இதனைக் கோரிக்கையாக வைத்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர் | தலீத் எதிரான வன்முறை | தீக்கதிர் |
| **50.** | 10.10.09 | **சிவகங்கை மாவட்டம்:** சூரக்குடியைச் சேர்ந்த 23 வயது பட்டதாரி இளைஞர் கனகராஜ் இவர் ஊனமுற்றவர் இவரை எஸ்.வி.மங்களம் காவல் நிலையத்தில் கடுமையாக தாக்கி கொடுமைபடுத்தி சித்திரவதை செய்ததை | ஊனமுற்றோர்களுக்கு எதிரான வன்முறை & காவல் நிலைய வன்முறை | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | மார்க்சிஸ்ட் கட்சி வன்மையாக கண்டித்துள்ளது. | | |
| 51. | 11.10.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமேஸ்வரம் மண்டபம் மற்றும் பாம்பன் பகுதிகளில் மீனவர்கள் கச்சத்தீவு அருகே மீன்பிடிக்க செல்லும் தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். | மீனவர் மீதான வன்முறை | மாலை மலர் |
| 52. | 11.10.09 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் மாநகராட்சி காலனியைச் சேர்ந்தவர் பரமசிவம் இவர் அதே பகுதியில் பலசரக்கு கடை வைத்து நடத்தி வருகிறார் இவரது மனைவி சித்ரா. அதே காலனியை சேர்ந்தவர் ஆறுமுகம்(35) பரமசிவத்திற்கும் தகராறு ஏற்பட்ட போது ஆறுமுகம் மளிகை கடை பொருட்களை எடுத்து ரோட்டில் வீசியதோடு தடுக்க வந்த சித்ராவை மானபங்கம் செய்தார் இது குறித்து அவனியாபுரம் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலை மலர் |
| 53. | 11.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** ஏ.டி.பி காம்பவுண்ட் சேர்ந்தவர் தங்கப்பாண்டியன் இவர் மனைவி ராக்கம்மாள், தங்கபாண்டியனுக்கும் காந்திபுரம் தெருவைச் சேர்ந்த பாண்டியம்மாளுக்கும் தொடர்பு இருந்தது. இதைக் கண்டித்த ராக்கம்மாளுக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக விருதுநகர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் சுடர் |
| 54. | 11.10.09 | **மதுரை மாவட்டம்:** சுந்தராஜபுரத்தைச் சேர்ந்தவர் கணேசன்(30) இவரது மனைவி கனிமொழி (28), கணேசன் தன் மனைவியிடம் ஓர்க்சாப் வைக்க கூடுதல் பணம் வரதட்சனை கேட்டு துன்புறுத்தியதாக மதுரை நகர் மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 55. | 11.10.09 | **மதுரை மாவட்டம்:** ஒத்தக்கடையைச் சேர்ந்தவர் கணேசன் மனைவி கலா, இவர் 13 ஏக்கர் நிலங்களை வேறு நபர்க்குப் போலி பட்டா மூலம் மாற்றித்தந்த வி.ஏ.ஓ. போஸ் மந்தைவீரர் தலையாரி உட்பட 5 பேர் மீது மேலூர் போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். | மோசடி | தினமலர் |
| 56. | 12.10.09 | **கன்னியாகுமரி மாவட்டம்:** திருவிதங்கோடு பேரூராட்சி ஆறாவது வார்டு தி.மு.க. கவுன்சிலர் வேலப்பன். இவர் பேரூராட்சி அலுவலகத்தில் இளம் நிலை உதவியாளர் சபீனா, பதிவறை எழுத்தர் சமீமா பீவி இருவரையும் வேலப்பன் ஆபாசமாக திட்டியதாக தக்கலை போலிஸார் பெண்கள் வன்கொடுமை சட்டத்தின் கீழ் கைது செய்தனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 57. | 12.10.09 | **கோவை மாவட்டம்:** குரும்பாளையத்தில் மத்திய ரீசர்வ் போலீஸ் படையினருக்கான | காவல் நிலைய வன்முறை | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | பயிற்சி முகாமிற்கு பயிற்சிக்கு வந்த ரிசர்வ் போலீஸ் 5பேர் குடிபோதையில் அங்குள்ள வீட்டுக்குள் புகுந்து பெண்களிடம் அத்துமீறி நடந்து கொண்ட மத்திய ரிசர்வ் போலீஸார் 3 பேர் கைது செய்யப்பட்டனர் 2பேர் தப்பி ஓடிவிட்டனர். | | |
| 58. | 12.10.09 | **வேலூர் மாவட்டம்:** அடுக்கம்பாறையைச் அடுத்த நெல்வாய் கிராமத்தைச் சேர்ந்தவர் திருநாவுகரசு விவசாயி இவரின் 2 வது மகள் அனுபிரியா, இவர் அப்பகுதியில் உள்ள பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வருகிறார். இவர் சில மர்ம ஆசாமிகளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார் இது குறித்து போலீஸார் விசாரனை செய்து வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 59. | 12.10.09 | **திருப்பூர் மாவட்டம்:** திருப்பூரில் நடந்த விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பாக போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் இரண்டு பேர் சஸ்பெண்டு செய்ய போலீஸ் டி.ஐ.ஜி உத்தரவு விட்டுள்ளார். | காவல்நிலைய வன்முறை | தினத்தந்தி |
| 60. | 12.10.09 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் தாலுகா நடுத்தெரு காலனியைச் சேர்ந்தவர் நாராயணன் அதே பகுதியில் குடியிருப்பவர் சக்கரத்தாய் பேத்தி மலர், இவரை நாராயணன் பாலியல் பலாத்காரம் செய்ததாக திருமங்கலம் மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 61. | 13.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே உள்ள கொந்தராயன் குளத்தைச் சேர்ந்தவர் பிச்சை விவசாயி இவரது மகன் செல்லத்துறை(22), இவர் ஒரு தனியார் கல்லூரியில் பி.லிட் படித்து வருகிறார், இவரது குடும்பம் மிகவும் ஏழ்மையானது என்பதால் கல்லூரி கட்டணம் கட்ட இயலாததால், அங்குள்ள நாட்டுமையாக்கப்பட்ட வங்கிக்கு தேவையான சான்றுகளுடன் கடந்த சில நாட்களுக்கு முன் சென்றார் அவ்வங்கியில் அலைக்கழித்தனர் இந்த விரத்தியில் செல்லத்துறை தீக்குளித்தார். | அரசு தன் கடமை செய்யாமை | தமிழ்சுடர் |
| 62. | 13.10.09 | **சென்னை மாவட்டம்:** ரேஷன் அரிசியை வெளிமாநிலங்களுக்கு கடத்தி விற்ற 100 பேர் மீது தடுப்பு காவல் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். | ரேசன் அரிசி கடத்தல் | தினத்தந்தி |
| 63. | 13.10.09 | **மதுரை மாவட்டம்:** கே.புதூர் அழகர் நகரைச் சேர்ந்தவர் ஆவத்தி இவரது மகள் கனகவள்ளி இவருக்கும் மானாமதுரையை அடுத்த பெரும்பசேரியை சேர்ந்த துரைராஜ் இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் இந்நிலையில் துரைராஜ் வேறு சில பெண்களுடன் தொடர்பு வைத்திருந்தாக | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | இதனைக் கண்டித்த கனகவள்ளியை துரைராஜும் அவரது தம்பி பாலுவும் அடித்து உதைத்ததில் கனகவள்ளியின் விரல் துண்டானது. இது குறித்து கே.புதூர் காவல் நியைத்தில் புகார். | | |
| 64. | 13.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை நகராட்சியில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்களை அதிகாரிகள் இழிவான மற்றும் தகாத வார்த்தைகளை பயன்படுத்தி அடிக்கடி தட்டி வருகின்றனர். இதனை கண்டித்து சிஐடியு சார்பில் ஆர்பாட்டம் நடைப்பெற்றது. | தலித் எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 65. | 13.10.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** கார்த்தியகவுண்டர்பட்டி அருகே செப்பட்டி பகுதியைச் சேர்ந்த முத்துமணி இவர் கண் பார்வையற்றவர், இவர் குணசேகரன் என்பவரைத் திருமணம் செய்து 15 வயது பெண் குழந்தையுள்ளது. இந்நிலையில் குணசேகரன் கூடதல் வரதட்சனை கேட்டதாக முத்துமணி திண்டுக்கல் காவல் கண்காணிப்பாளரிடம் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | எக்ஸ்பிரஸ் |
| 66. | 13.10.09 | **நாமக்கல் மாவட்டம்:** திருப்பூரைச் சேர்ந்தவர் ஜவுளி கடை வியாபாரி ராஜேஸ் தீபாவளியை முன்னிட்டு திருச்செங்கோட்டில் ஜவுளிகடை வைக்க முடிவு செய்தார். மாவட்ட நிர்வாக அனுமதி வேண்டு பி.ஆர்.ஒ. பால்ராஜை அனுகியபோது 10 ஆயிரம் லஞ்சம் வாங்கியதாக பால்ராஜ் லஞ்ச ஒழிப்புதுறை காவலர்களால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினமலர் |
| 67. | 13.10.09 | **மதுரை மாவட்டம்:** பல்கலை நகர் செக்காரஹூரணி ரேஷன் கடைகளில் கலெக்டர் மதிவாணன் ஆய்வு செய்ததில் விற்பனையாளர்கள் பதுக்கி வைத்திருந்த 22 போலீ ரேஷன் கார்டுகள் கைப்பற்றினர் இரு விற்பனையைாளர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். | ஊழல் | தினமலர் |
| 68. | 13.10.09 | **மதுரை மாவட்டம்:** வடக்குமாசி வீதியைச் சேர்ந்தவர் முருகவள்ளி இவரது கணவர் 4 ஆண்டுகளுக்கு முன்வு இறந்துவிட்டார் இந்நிலையில் 3 குழந்தைகளுடன் இருக்கும் முருகவள்ளியை வீட்டை விட்டு வெளியேறுமாறு அவரது கணவர் வீட்டார் துன்புறுத்தியதால் தன் 3 குழந்தைகளுடன் முருகவள்ளி போலீஸ் கமிஷனரிடம் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 69. | 14.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் அருகே உள்ள சுந்தராஜபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் வெள்ளைச்சாமி விவசாயி இவரது மகள் சரஸ்வதி, அதே பகுதியைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் என்பவர் மகன் ராமராஜீவும் | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலை மலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காதலித்து திருமணம் செய்து கொண்டனர், இந்நிலையில் ராமராஜீ அடிக்கடி பணம் கேட்டு மனைவி சரஸ்வதியை தொந்தரவு செய்துள்ளார். முன்று மாதங்களுக்கு முன்பு சரஸ்வதி குளிக்க செல்வதாக சென்றவர் வீடு திரும்பவிலை, இது குறித்து சேத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர், இந்நிலை காணமல் போன சரஸ்வதி சுந்தராஜபுரம் கிராமத்தின் ஒதுக்குப்புறமாக உள்ள குலத்தைகுளம் கண்மாய் பகுதியில் கொல்லப்பட்டு இறந்து கிடந்தார். இது குறித்து சேத்தூர் ஊரக போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரனை மேற்கொண்டு வருகின்றனர். | | |
| **70.** | 14.10.09 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றம் அருகே பறையன்குளத்தை திருமலையூர் என பெயர் மாற்ற வேண்டும் என ஒரு பிரிவினர் தெரிவித்தனர் இதற்கு மற்றொரு பிரிவினர் எதிர்தப்பு தெரிவித்தனர் இப்பிரச்சனை தொடர்பாக நேற்று முன்தினம் தகராறு ஏற்பட்டது. இதில் மனோரஞ்சிதம், பழனியம்மாள், பிரேமா(21) ஆகியோரை ஜாதி பெயர் சொல்லிதிட்டியும் தாக்கப்பட்டனர் வீடுகளை சூறையாடினர் இதில் 3போரும் படுகாயம் அடைந்தனர், இது குறித்து திருப்பரங்குன்றம் டி.எஸ்.பி. வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். | தலீத் எதிரான வன்முறை | தமிழ் முரசு |
| **71.** | 14.10.09 | **மதுரை மாவட்டம்:** திருப்பறங்குன்றம் கீழத்தெருவைச் சேர்ந்தவர் பிரபு இவரது அக்கா லெட்சுமியின் கணவர் கிவானந்தம் இப்பகுதியில் புதிதாக வீடுகட்டி வருகிறார். இவர் மின் இணைப்பு வாங்குவதற்காக வீட்டுவரி செலுத்துவதாக திருப்பரங்குன்றம் நகராட்சிக்கு பில்கலெக்ட்டராக பணிப்புரியும் ராஜா என்பவரை அணுகினார். இவர் வீட்டு வரி போட 600ரூ லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஒழிப்புத்துறை காவலர்களால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தமிழ் முரசு |
| **72.** | 14.10.09 | **மதுரை மாவட்டம்:** பைபாஸ்ரோடு பகுதியில் வசிப்பவர் அசோகன்(34) இவரது மனைவி அனிதா, இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளன. குடும்பதகராரின் காரணமாக கணவன் மனைவி இருவரும் பிரிந்து வாழ்கின்றனர். இந்நிலையில் அசோகன் அனிதாவை நடுரோட்டில் சேலையைப்ப பிடித்து இழுத்து அசிங்கமாகக் பேசி மானபங்கம படுத்தியதாக கரிமேடு போலீஸார் அசோகனை கைது செய்தனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |
| **73.** | 14.10.09 | **மதுரை மாவட்டம்:** கீரைத்துறையைச் சேர்ந்தவர் சுந்தரம், இவரது மனைவி | மோசடி | தமிழ் முரசு |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | தமிழ்செல்வி இதேப்பகுதியைச் சேர்ந்தவர் முத்து இவரது மனைவி மாரியம்மாள் வெளிநாட்டில் வேலை வாங்கி தருவதாக கூறி மாரியம்மாள் மற்றும் அவரது உறவினர்கள் 5 பேர் சேர்ந்து தமிழ்செல்வியிடம் ஆசை வார்த்தை கூறி 1.5 லட்சம் மோசடி செய்துள்னர் இது குறித்து மதுரை மத்திய குற்றப்பிரிவு போலீசார் வழக்குபதிவு செய்து விசாரித்து வருகின்றனர். | | |
| **74.** | 15.10.09 | **சிவகங்கை மாவட்டம்:** திருப்புவனத்தைச் சேர்ந்தவர் அப்துல்கபூர் தாக்கல் செய்த ஹேபில் சார்பஸ் மனுவில் அவரது மகன் பிரோடஸ்பானுவுக்கும், சாகுல்அமிர்க்கும் திருமணம் நடந்தது. அவர் மலேசியாவில் வேலை செய்து வருகிறார். கணவருடன் ஏற்பட்ட பிரச்சனையில் பிரேகடஸ்பானு திரும்பினார் திருவரங்கத்தை சேர்ந்த அலிஜமால் என்பவர் பிரோடஸ்பானுவை மலோசியாவிற்கு கடத்தி சென்றதாகவும் மகளை மீட்டு ஆஜர்படுத்த கோரி புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| **75.** | 15.10.09 | **நாகை மாவட்டம்:** வேதாரண்யத்தை அடுத்த செட்டிப்புலம் கிராமத்தில் ஏகாம்பரேஸ்வரர் கோவில். ஆதிதிராவிட மக்களை கோவிலுக்குள் நுழைய கடும் எதிர்ப்பு இதனால் திடீர் கலவரம் ஏற்பட்டது. இதனால் போலீஸார் துப்பாக்கி சூடு தடியடி நடத்தி கலவரத்தைக் கட்டுப்படுத்தினர். | தலீத் எதிரான வன்முறை& காவல் வன்முறை | |
| **76.** | 15.10.09 | **சிவகங்கை மாவட்டம்:** மானாமதுரை சாஸ்தா நகரைச் சேர்ந்தவர் சுரேஷ் இவருடைய மனைவி சண்முகபிரியா இவர் தனது பிரசவத்திற்காக மதுரை அரசு மருத்துவமனையில் ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தையின் தலையில் வெள்ளை முடியாக இருந்ததால் சண்முகபிரியா, மருத்துவமனை தொட்டில் குழந்தை திட்டத்தில் போட்டு சென்று விட்டார், இது குறித்து மருத்துவமனை போலீஸார் விசாரித்து வருகின்றனர். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| **77.** | 15.10.09 | **வேலூர் மாவட்டம்:** ராணிப்பேட்டை ஆஞ்சனேயர் கோவில் தெருவில் உள்ள ரேஷன் கடையை அமைச்சர் வேலு செய்த சோதனையில் எடையாளர் பிச்சைமூர்த்தி அநாகரிகமாக பேசுவதோடு உணவுப்பொருட்களை சரியான முறையில் வழங்குவதில்லை என்ற புகாரில் எடையாளர் பிச்சைமூர்த்தி உடனடியாக கைது செய்யப்பட்டார். | ரேஷன் கடைகளில் முறைகேடு | தினகரன் |
| **78.** | 15.10.09 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் அருகே உள்ள தாளையூத்து பட்டியைச் சேர்ந்தவர் சின்னராஜ, இவரது மனைவி சிவகோகிலா | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | இவரை கணவர் மற்றும் அவரது குடும்பத்தினர் கூடுதல் வரதட்சனைக் கேட்டு துன்புறுத்தியதாக திருமங்கலம் மகளிர் காவல் நிலையத்தில் புகார். | | |
| 79. | 15.10.09 | **தேனி மாவட்டம்:** பாரஸ்ட் ரோட்டைச் சேர்ந்த பாரதிதாசன் வசந்தா தம்பதியினருக்கு 13 மாத கைக்குழந்தை உள்ளது. இவர் தச்சு தொழிலாளி வறுமையின் காரணமாக வசந்தா தனது 13 மாத பெண் குழந்தையை வைகை அனையில் வீசினார், சந்தர்ப்பவசமாக அப்பெண் குழந்தை காப்பாற்றப்பட்டது. இது குறித்து வைகை அணை புறக்காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. | பெண்களுக்கு எதிரான வன்முறை& வறுமை | தீக்கதிர் |
| 80. | 15.10.09 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** செங்கல்பட்டை அடுத்த கொத்தூர் கிராமத்தைச் சேர்ந்த செல்வி என்பவருக்கும், விஜயகுமாருக்கும் 18 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. இவர் இரண்டு பெண் குழந்தையும் ஒரு ஆண் குழந்தையும் உள்ளனர். இருவரிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்துள்ளனர். கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பு முத்தமகள் மீனா மகன் பாலாஜியையும் வெளிநாட்டில் படிக்க வைப்பதாக கூறி கணவர் அழைத்து சென்றார். தற்போது தன் கணவனிடம குழந்தைகள் எங்குள்ளனர் என்று கேட்டதற்கு அவர் பதில் ஏதும் கூறவில்லை. இதனால் செல்வி, தன் இரண்டு குழந்தைகளை மீட்டு தரக்கோரி சென்னை உயர் நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 81. | 16.10.09 | **மதுரை மாவட்டம்:** திருநகர் தனக்கன் குளத்தைச் சேர்ந்தவர் ஆறுமுகம் இவரது மகன் முத்துபாண்டி இவர் தனியார் மேல்நிலைப்பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வந்தார். இவர் சரியாக படிக்காததால் ஆசிரியர் திட்டியதால் மூத்துபாண்டி உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து திருநகர் போலீஸில் புகார். | பள்ளி வன்முறை | தமிழ் முரசு |
| 82. | 16.10.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** ஜமுனாமரத்துரில் வாழும் மலைவாழ் மக்கள் மீது பொய்வழக்கு போடும் வனத்துறை அதிகாரிகளை கண்டித்து வி.தொ.ச.சார்பில் ஆர்ப்பாட்டம், பொதுக்கூட்டம் நடைபெற்றது. | காவல் நிலைய வன்முறை | ஜன சக்தி |
| 83. | 16.10.09 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றத்தைச் சேர்ந்த கதிரேசன் மகள் பாப்பாத்திக்கும், அதே பகுதியியைச் சேர்ந்த சங்கருக்கும் பல மாதங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. கங்கர் ஏற்கெனவே திருமணம் ஆனவர் என்பது | பெண்களுக்கு எதிரான வன்முறை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தெரியவந்ததால் இருவருக்கும பிரச்சினை வந்துள்ளது. இந்நிலையில் கூடல்மலை அருகே பாப்பாத்தி இறந்த நிலையில் கிடந்தார், இது குறித்து போலீஸார் விசாரனை நடத்தி வருகிறார்கள். | | |
| 84. | 17.10.09 | **மதுரை மாவட்டம்:** டி.கல்லுப்பட்டி அருகே உள்ள வி.குச்சம்பட்டியைச் சேர்ந்தவர் தவசிபாண்டி இவரது மகள் பள்ளி சம்பவத்தன்று பள்ளிகூடத்துக்க போகவில்லை இதனால் ஆசிரியர் திட்டுவாரே என நினைத்து வீட்டில் யாருமில்லாத நேரத்தில் மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து டி.கல்லுபட்டி போலீஸார் விசாரனை நட வருகின்றனர். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தமிழ் சுடர் |
| 85. | 17.10.09 | **தேனி மாவட்டம்:** வீரபாண்டி அருகே உள்ள தர்மபுரி வடக்குத் தெருவைச் சேர்ந்தவர் தெல்வேந்திரன், விவசாயி இவரது மகள் நாகலட்சுமி, இதே ஊரைச் சேர்ந்த ஒய்வு பெற்ற ராணுவவீரர் சங்கரின் மகன் ராம்குமார்(23) மதுரையில் உள்ள தனியார் பால்டெக்னிக் கல்லுரியில் 3ம் ஆண்டு படித்து வருகின்றனர். ராம்குமாரம் நாகலட்சுமியும் ஒரு ஆண்டாக காதலித்து வருகின்றனர். இந்நிலையில் நாகலெட்சுமி கர்ப்பமானர். இது குறித்து தேனி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 86. | 17.10.09 | **தேனி மாவட்டம்:** தேனி அருகே உள்ள வடபுதுப்பட்டி ரைஸ்மில் தெருவைச் சேர்ந்தவர் ராஜா இவரது மனைவி விரலெட்சுமி(31) வீரலெட்சுமியின் கணவர் வரதட்சனை கேட்டு மிரட்டியதாக தேனி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 87. | 17.10.09 | **நிலகிரி மாவட்டம்:** பந்தலூர் வட்டத்தில் ––––கிராமத்தைச் சேர்ந்த கொந்தமங்கலம் கோட்டூர், ஆகிய பகுதிகளில் ஆதிவாசி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களது 1.47 ஏக்கர் நிலத்தை மயான பூமியை வேளி அமைத்து பாதுகாத்து தரக்கோரி மாவட்ட ஆட்சித்தலைவரிடம் புகார். | தலீத் எதிரான வன்முறை | தமிழ் சுடர் |
| 88. | 17.10.09 | **மதுரை மாவட்டம்:** சோலை அழகுபுரத்தைச் சேர்ந்தவர் நாகலட்சுமி(23) இவருக்கும் அதே பகுதியைச் சேர்ந்த காளிதாசுக்கும் திருமணம் நடந்தது. நாகலட்சுமியை கூடதல் வரதட்சனை கேட்டு துன்புறுத்தியதாக மதுரை டவுண் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |
| 89. | 17.10.09 | **மதுரை மாவட்டம்:** வில்லாபுரத்தைச் சேர்ந்தவர் சகிலாபானு இவருக்கும் பெங்களூரைச் சேர்ந்த ஹாஜகானுக்கும் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. தற்போது சகிலாபானுவிடம் கணவர், | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணவரின் குடும்பத்தார் கூடுதல் வரதட்சனை கேட்டதாக திருப்பரங்குன்றம் காவல் நிலையத்தில் புகார். | | |
| 90. | 17.10.09 | **மதுரை மாவட்டம்:** நடுமுதலை சேர்ந்தவர் சித்ரா, இவருக்கும் குருவித்துறையை சேர்ந்த தங்கபாண்டிக்கும் 3 வரடமுன்பு திருமணம் நடந்தது. தற்போது கூடுதல் வரதட்சனைக் கேட்டு துன்புறுத்துவதாக உசிலம்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |
| 91. | 17.10.09 | **ராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடி தெலுச்சகாத்தை நல்லூரைச் சேர்ந்தவர் கண்ணுசாமி இவரது மகன் ஆறுமுகம் கொலை வழக்கில் கைதாகி மதுரை மத்திய சிறைசாலையில் அடைக்கப்பட்டார். இந்நிலையில் இவர் புற்றுநோயால் அவதிபட்டு மருத்துவமனையில் இறந்தார். இது குறித்து கரிமேடு காவல் நிலையத்தில் புகார். | காவல் மரணம் | மாலை மலர் |
| 92. | 19.10.09 | **மதுரை மாவட்டம்:** திருத்தங்கலை சேர்ந்தவர் ரவிக்குமார் இவருக்கும் செல்விக்கும் திருமணமாகி 3 வருடங்கள் ஆகிறது, 11/2 வயது பெண் குழந்தை உள்ளது. கணவன் மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனை, இந்நிலையில் செல்வி விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து கீழவளவு போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் சுடர் |
| 93. | 19.10.09 | **திருவள்ளுவர் மாவட்டம்:** பள்ளிப்பட்டியில் ஆனந்தன் என்பவர் அரிசி ஆலை ஒன்றில் அரசு அனுமதி பெறாமல் நடத்திய பட்டாசு கடையில் ஏற்பட்ட தீ விபத்தில் 32பேர் பலி அனுமதியின்றி பட்டாசு கடை நடைபெற்றுள்ளதை கண்காணிக்காமல் பெறுப்பற்ற அரசியல் அதிகாரிகள் 7 பேர் சஸ்பெண்ட். | அரசு தன் கடடை செய்யாமை | தீக்கதிர் |
| 94. | 19.10.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் நடுக்கடலில் தாக்கி படகுகளை சேதப் படுத்தி விரட்டியடித்தனர். | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 95. | 19.10.09 | **தேனி மாவட்டம்:** தேவாரம் அழகர் நாயக்கன்பட்டியை சேர்ந்த மணி என்பவரது மனைவி பவுன்தாய் அடிக்கடி உடல் நலக்குறைவு காரணத்தால் பவுன்தாய் விஷம் குடித்தார், உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதும் காலதாமதமாக சிகிச்சை அளித்ததால் பவுண்தாய் இறந்தார். | அரசு தன் கடமை செய்யாமை | தினமலர் |
| 96. | 19.10.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** ஆரணியை அடுத்த இரும்பேடு கிராமத்தை சேர்ந்த கமலதாஸ், கனிமொழி இவரது தலை பிரசவத்துக்கு தச்சூர் ஆரம்ப சுகாதார | மருத்துவர் தன் கடமை செய்யாமை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிலையத்தில் சேர்க்கப்பட்டார் தீபாவளி என்பதால் டாக்டர்கள் சீக்கிரமாக வீட்டிற்கு சென்றதால் இவரது பிரசவத்தை நர்சுகள் பார்த்ததால் தாயும், சேயும், இறந்தனர். இது தொடர்பாக கிராம மக்கள் சாலை மறியல் நடத்தினர். | | |
| 97. | 20.10.09 | **மதுரை மாவட்டம்:** மதுரை அருகே எம்.கல்லுபட்டி மதிப்பனூரைச் சேர்ந்தவர் பானுமதி(21), இவர் தனத அக்கா வீட்டில் இருக்கும் போது அதே பகுதியைச் சேர்ந்த ஜோதிமணி என்பவர் பானுமதியை பாலியல் பலாத்காரம் செய்தார். இது குறித்து திருமங்கலம் மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 98. | 20.10.09 | **புதுக்கோட்டை மாவட்டம்:** புதுக்கோட்டை பகுதிகளில் பெரும்பாலான ரேசன் கடைகளில் ரேசன் அரிசியை கடத்தி கொள்ளை லாபம் சம்பதிக்கும், அளுங்கட்சி பிரமுகர் ஆதரவோடு அரிசி கடத்தப்படுகிறது. இது குறித்து மார்க்சிஸ்ட் கட்சியின் மாவட்டகுழு வலியுறுத்தியுள்ளது. | ரேஷன் அரிசி கடத்தல் | தீக்கதிர் |
| 99. | 20.10.09 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரத்தில் மாமூல் கேட்டு இரும்பு வியாபாரி களஞ்சியம்,ரௌடிகள் மனாயர், கனி, ராமமூர்த்தி, சத்தியமூர்த்தி, 4 பேர் மாமூல் கேட்டு களஞ்சியத்தின் மனைவியை தாக்கினர், இது குறித்து அவனியாபுரம் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 100. | 20.10.09 | **சென்னை மாவட்டம்:** ஜோலார்பேட்டையைச் சேர்ந்தவர் சமரசம் இவர் பி.எஸ்.என்.எஸ்.டெலிபோன் நிறுவனத்தில் என்ஜீனியராக பணியாற்றுகிறார். இவரது மகள் மதியரசி(20), இவர் சென்னை கீழ்பாக்கம் மருத்துவ கல்லூரியில் நான்காம் ஆண்டு எம.பி.பி.ஸ் படித்து வருகிறார் இவரும் இவரது தாய்மாமான் கலைவேந்தனும், காதலித்து வந்ததாகவும் தீடீரென மதியரசி வேறு பைனுடன் திருமணம் பேசி முடிவு செய்ததை கேள்விபட்ட கலைவேந்தர், மதியரசியை கல்லூரி வளாகத்தில் வைத்து கத்தியால் குத்தினார். இது குறித்து கீழ்பாக்கம் போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 101. | 20.10.09 | **மதுரை மாவட்டம்:** தேவகோட்டையில் உள்ள கிராம நிர்வாக அதிகாரி கூட்டுறவு சிக்கன நாணய சங்கா,செயலாளராக இருப்பவர் மெய்யப்பன். இவர் கிராம நிர்வாக அதிகாரிகள் பெயரில் போலி ஆவணங்கள் செய்து 4.1/3 லட்சம் மோசடி செய்தவரை கூட்டுறவு குற்றபுலனாய்வு துறை இன்ஸ்பெக்டர் ஞானசம்பந்தம் கைது செய்தார். | மோசடி | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 102. | 20.10.09 | **தேனி மாவட்டம்:** உந்தபாளையம் வட்டம் வடுகபட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் ஜெயமாண்டி(22), துரைராஜ(27), சிவகுமார்(19), தீபாவளி நேரத்தில் ஆதிக்கசாதியினர் வீதியில் வெடி வெடித்தனர். ஆதிக்க சாதியினர், தலீத் இளைஞர்களை குடித்து விட்டு தாக்கியும், சாதியைச் சொல்லி திட்டியும் உள்ளனர் இது குறித்து தென்கரை காவல் நிலையத்தில் புகார். | தலீத் எதிரான வன்முறை | இந்தியன் எக்ஸ்பிரஸ் |
| 103. | 21.10.09 | **கோவை மாவட்டம்:** அவிநாசி ரோடு டெசிடென்சி ஒட்டல் எதிரில் வசித்துவரும் தொழிலதிபர் சூரியகுமார் மகன் வெங்கட்ராம கிருஷ்ணன்(எ)வெங்கட்ராம்த(43), இவர் 16 ஆண்டுகளுக்கு முன்பு விவேக் கொலை வழக்கில் ஆயுள்தண்டனைப்பெற்று கோலை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார் இந்நிலையில் வெங்கட்ராம், கோவை சிறையில் தூக்கபோட்டு தற்கொலை செய்து கொண்டார். | காவல் நிலைய மரணம் | தினகரன் |
| 104. | 21.10.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் பர்மா காலனியைச் சேர்ந்தவர் மரியன்பீவி(55), இவரது மகள் நக்கர்நீஷா இவர்கள் வீட்டின் அருகே வசித்து வருபவர் முகமது அலி(35) ஏற்கனவே திருமணமானவர் இவர் நக்கர்நிஷாவை இரண்டாவது திருமணம் செய்து கொடுக்குமாறு மரியன் பீவியிடம் கேட்டபோது அவர் மறுத்ததால் முகமது அலி மரியன்பீவியை கத்தியால் கண்ணில் குத்தினார் இதில் அவரது விழி பிதுங்கியது. இது குறித்து மேலூர் போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 105. | 21.10.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே உள்ள இ.மலம்பட்டியில் அரசு மேல் நிலைப்பள்ளி வளாகத்துக்குள்ளே மதுபாட்டில்கள், ஆணுறைகள், கிடந்ததால் மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், அதிர்ச்சி அடைந்தனர், பள்ளிக்கு சுற்றுசுவர் கட்ட வலியுறுத்தி நாளை மறியல் போராட்டம் நடத்தபோவதாக ஊராட்சி மன்ற தலைவர் பாண்டியன் கூறுகிறார். | பள்ளி வன்முறை அரசு தன் கடமை செய்யாமை | தினகரன் |
| 106. | 21.10.09 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றத்தை அடுத்த தனக்கன்குளம் திருவள்ளுவர் நகரைச் சேர்ந்தவர் மகாலிங்கம், இவரது மகள் ரம்யா(17), இவர் வறுமையில் உள்ள தனியார் வாலிடெக்னிக் கல்லூரியில் 2ம் ஆண்டு பயின்று வருகிறார். இவரை பெற்றோர் திட்டியதால் ரம்யா தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார், இது குறித்து திருப்பரங்குன்றம் போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 107. | 21.10.09 | **மதுரை மாவட்டம்:** மகாத்மாகாந்திநகர் பகுதியில் ஊமச்சிகுளம் போலீஸ் இன்ஸ்பெக்டர் வெள்ளையன் மற்றும் போலீசார் நேற்று முன்தினம் இரவு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர் அதிகாலையில் 3 மணியாளவில் மகாத்மாகாந்தி நகர் பஸ்தநிலையம் அருகே டாஸ்மார்க் கடையின் எதிரே ஒரு பெண் தீயில் கருகி இறந்து கிடந்தார், இது தொடர்பாக போலீஸார் விசாரனை செய்து வருகிறார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 108. | 21.10.09 | **ஈரோடு மாவட்டம்:** அவல்பூந்துறையைச் சேர்ந்த மணியன் மனைவி ஜெயமணி காங்கயம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் போலாராக பணிபுரிந்தர், இவரை லாரி டிரைவர் ஜெயசங்கர்(எ)சங்கர் என்பவர் பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்துள்ளார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 109. | 21.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** திருத்தங்கல் பாண்டியன் நகரை சேர்ந்தவர் காமராஜ் இவரது மகள் பூமாரி(19) இவர் பட்டாசு ஆலையில் பணியாற்றினார் இவருடன் பணிபுரிந்தவரை காதலித்தார், காதலை வீட்டில் எதிர்த்ததால் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து சிவகாசி கிழக்கு போலீஸார் விசாரித்து வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 110. | 21.10.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** சாயக்குடி அருகே உள்ள வாலி நோக்கத்தில் ஜமத்தகளில் ரசீது போடுவதில் ஏற்பட்ட பிரச்சனையில் பொதுமக்களுக்கும் போலீஸாருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 2 போலீசார் காயமடைந்தனர். 15 பேரை கைது செய்த போலீஸார் 40 பேரை தேடி வருகின்றனர் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 111. | 21.10.09 | **மதுரை மாவட்டம்:** சின்னமாங்குளம் பகுதியைச் சேர்ந்தவர் பழனிசாமி(29) இவரது மனைவி சுதா, இவரை இவரது கணவர், பழனிசாமி மற்றும் சமுத்திர பாண்டியம்மாள் சேர்ந்து சித்திரவதை செய்ததாக மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |
| 112. | 21.10.09 | **தேனி மாவட்டம்:** பெரிய குளம் வட்டம் வடபுதுபட்டி அம்மாபட்டி கிராமத்தில் உள்ள தலீத்து மக்களுக்கு பலவிதமான தீண்டாமை கொடுமைகள் நடத்தப்படுகின்றன அவ்வூரில் உள்ள அங்கன் வாடியில் ஆசிரியர் தலீத் குழந்தைகளை மற்ற பிரிவினர் குழந்தைகளிடமிருந்த பிரித்து ஒதுக்கி வைத்து நடத்துவதாக தேனி கண்காணிப்பாளரிடம் புகார். | தலீத் எதிரான வன்முறை | இந்தியன் எக்ஸ்பிரஸ் |
| 113. | 22.10.09 | **மதுரை மாவட்டம்:** செல்லூர் கட்டபொம்மன் நகரைச் சேர்ந்தவர் கணேசமூர்த்தி மகள் அன்புமணி கம்ப்யூட்டர் இன்ஜினியராக வேலை | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | பார்த்த வந்தார் இந்நிலையில் வீட்டில் தனியாக இருந்த அன்புமணி வீட்டில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். | | |
| 114. | 22.10.09 | **மதுரை மாவட்டம்:** செல்லூரைச் சேர்ந்த ஆட்டோ டிரைவர் மனைவி சுகன்யா திருமணமான 6 மாதங்களில் கூடுதல் வரதட்சனை கேட்டு துன்புறுத்தியதால் தீக்குறித்து தற்கொலை செய்து கொண்டார், இது குறித்து செல்லூர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 115. | 22.10.09 | **மதுரை மாவட்டம்:** திருப்பாலையை அடுத்த கண்ணனேந்தலை சேர்ந்தவர் ஜெசித்ரா இவரது வீட்டுக்கு வந்து குற்றவியல் அதிகாரி பிரபாகரன் மற்றும் அவரது வக்கீல் உதயகுமார் மிரட்டியதாக அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்ய உத்திரவிடக்கோரி மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கும்படி போலீசுக்கு மதுரை ஐகோர்ட் கிளை உத்தரவிட்டது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 116. | 22.10.09 | **மதுரை மாவட்டம்:** கூடக்கோவில் அருகே உள்ள தும்பக்குளம் முனியாண்டிபுரத்தைச் சேர்ந்த விவசாயி பகவதி இவரது நிலத்தில் காட்டுராஜா என்பவரது ஆடுகள் மேய்ந்த தகராறில் காட்டுராஜா பகவதி மற்றும் அவரது மனைவியை அடித்து உதைத்தார், இது குறித்து கூடக்கோவில் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 117. | 22.10.09 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் அருகே உள்ள சிந்தாமணி பர்மா காலனியைச் சேர்ந்தவர் சுப்பிரமணி இவர் தன் வீட்டு முன்பு காரை நிறுத்தி இருந்தார், அப்போது அதே பகுதியைச் சேர்ந்த 7 பேர் கொண்ட கும்பல் கார் முன்பு பட்டாசு வெடித்தனர். இதனை பார்த்த சுப்பிரமணியின் மகள் பிரேமா பட்டாசு வெடிக்காதீர்கள் என்று கூறிய பெண்ணை மானபங்கப்படுத்தி சுப்பிரமணியை தாக்கினர். இது குறித்து அவனியாபுரம் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 118. | 22.10.09 | **திருவள்ளுவர் மாவட்டம்:** கும்பகோணத்தைச் சேர்ந்தவர் பாஸ்கர் உயிரியில் நிபுணர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் வெள்ளைச்சாமி உயிரியல் பூங்காவில் டிரைவராக பணிபுரிந்து வருகிறார். இருவரும் சென்னையை சேர்ந்தவர் குமார் இவரது மனைவி அனிதா, நர்ஸ் இவர் விரும்பாக்கம் இளங்கே நகரில் தனது சகோதரி வீட்டிற்கும் ஆட்டோவில் செல்லும் வழியில் மேற்கண்ட இரு நபர்களால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். இது குறித்து போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 119. | 22.10.09 | **கன்னியாகுமரி மாவட்டம்:** திருவிதால் கேட்டையைச் சேர்ந்தவர் ராஜீ மனைவி அன்னம்மாள் இருவரும் ஆரல்வாய் மொழியில் செங்கல் ஆளையில் வேலை பார்த்து வந்தனர் இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் செங்கல் ஆளையில் முன்பணம் வாங்கி ராஜீ மாயமானார். செங்கல் சூளை உரிமையாளர் முன்பணம் கேட்டு நெருக்கடி கொடுத்தால் அன்னம்மாள் தன் இரண்டு குழந்தைகளுடன் தற்கொலை செய்து கொண்டார். | கொத்தடிமை | தினமலர் |
| 120. | 22.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூர் சி.எம்.நகரைச் சேர்ந்தவர் கணேசமூர்த்தி அதே ஊரைச் சேர்ந்தவர் நீர்மலா திருமணமாகி 9 வயதில் இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். கணேசமூர்த்தி கேரளாவுக்கு வேலைக்கு சென்ற இடத்தில் குளு(19) என்ற பெண்ணை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார். இதனை கண்டித்து நிர்மலாவை கணேசமூர்த்தி சூடுபோட்டு கழுத்தை நெரித்து கொலை செய்ய முயற்சி செய்ததாக ஸ்ரீவில்லிபுத்தூர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 121. | 23.10.09 | **மதுரை மாவட்டம்:** கள்ளிக்குடி அருகே பேய்க்குளம் கிராமத்தில் நூறுநாள் வேலைத்திட்டத்தை பெருமாதக் காலமாக யாருக்கும் பணிகள் ஒதுக்கப்படவில்லை இதனால் கிராம மக்கள் ஊராட்சி மன்ற தலைவர் நாகராஜிடம் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை, இது தொடர்பாகயுள்ள எல்லா அரசு அதிகாரிகளை அனுகியும் தீர்வு காண இயலவில்லை இறுதியில் கிராமமக்கள் எம்.எல்.ஏ.லதாஅதியமான் அவர்களிடம் முறையிட்டனர் அவர் அதிகாரிகளிடம் பேசி ஆவண செய்வதாகக் கூறினார். | அரசு தன் கடமை செய்யாமை | தினமணி |
| 122. | 23.10.09 | **மதுரை மாவட்டம்:** உசிலாம்பட்டி தாலுகா சிம்மநத்தம் ஊராட்சிக்குட்பட்டது. சுமிஓச்சானைபட்டி இங்குள்ள அரசப் பள்ளியில் ஏராளமான மாணவர்கள் படித்து வருகின்றனர், இப்பள்ளியில் 4ஆசிரியர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். ஆசிரியர் பற்றாக்குறை இது குறித்து ஊராட்சி நிர்வாகம், கிராமமக்கள் மூன்று மாதத்திற்கு முன்பு சந்தித்தும், வலியுறுத்தியுள்ளனர் ஆனால் மக்களின் கோரிக்கை நிறைவேறவில்லை மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாகக் கூறி கிராமமக்கள் பேருந்துகளை சிறைப்பிடித்து சாலை மறியல் நடத்தினர். | அரசு தன் கடமை செய்யாமை<br>&<br>மாணவர்களுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 123. | 23.10.09 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ஊத்தங்கனை அடுத்த பொம்மதாசம் பட்டியைச் சேர்ந்தவர் | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | விஜயா, கூலி தொழிலாளி, இவரது கணவர் தனபால் இறந்து விட்டார். இவர் தனது மகள் பிரியா அரசு பள்ளியில் 7–ம் வகுப்பு படிக்கிறார். இந்நிலையில் பிரியாவுக்கு திருமணம் நடப்பதாக கலெக்டர் சண்முகத்துக்கு தகவல் கிடைத்ததும் ஊத்தங்கரை தாசில்தார் மூலம் பிரியாவின் திருமணம் தடை பெற்றது. | | |
| 124. | 23.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜாபளையம் அருகே திருவேங்கடபுரத்தைச் சேர்ந்தவர் சேதுராஜ் இவர் தன்னுடைய நிலத்திற்கு பட்டா வாங்குவதற்கு தாலுகா அலுவலகத்தில் அலுவலக உதவியாளர் வெங்கடேஷ் 300 ரூ லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஒழிப்புதுறை காவலர்களால் கைது செய்யப்பட்டு 3 ஆண்டு காலம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. | லஞ்ச ஊழல் | தினகரன் |
| 125. | 23.10.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழனி அருகேயுள்ள பாலசமுத்திரத்தைச் சேர்ந்தவர் நாகராஜ் இவர் தன் வீட்டுக்கு மின் இணைப்பு பெற மின்வாரிய அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். மின் இணைப்பு வழங்க 5.ஆயிரம் ரூபாய் லஞ்சம் கேட்ட மின்வாரிய உதவி, இன்ஜினியர், ராஜேந்திரன் லஞ்ச ஒழிப்புத்துறை காவலரால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினகரன் |
| 126. | 23.10.09 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோட, தீருப்பூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர் சின்னமுத்து சிவக்குமார், காமராஜ் உள்ளிட்டோர் கோடங்கி தொழில் செய்து வருகிறார், இவர்களை கட்டப் பஞ்சாயத்து செய்து ஊரைவிட்டு ஒதுக்கி வைத்துள்ளனர், கட்டப்பஞ்சாயத்து ஈடுபடுடோர் மீது நடவடிக்கை எடுக்க கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். | சமூக புறக்கணிப்பு | தமிழ்சுடர் |
| 127. | 23.10.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** ஆத்தூர் ஒன்றியம் , சின்னாளப் பட்டி, பூஞ்சோலை மற்றும் என்சி.சி. சாலையில் அமைந்துள்ள தனியார் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளியில் மாணவ, மாணவிகளிடம், சைக்கிள் நிறுத்த, கழிப்பறை சுத்தம் செய்ய வசூல் செய்ததால் பெற்றோர்கள் கடும் எதிர்ப்பினை தெரிவித்தும், மாவட்ட கலெக்டரிடம் புகார் கொடுத்தனர். | பள்ளி வன்முறை | தமிழ் சுடர் |
| 128. | 23.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை அருகே மண்டல மாணிக்கம் கிராமத்தில் வசிப்பவர் கஸ்தூரி(26), இவருக்கும் நல்லதுரை கிராமத்தைச் சேர்ந்த செந்திவேலுவுக்கும் திருமணம் நடந்தது, தற்போது கூடுதல் வரதட்சனை கேட்டு துன்புறுத்தியதாக அருப்புகோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 129. | 24.10.09 | **கரூர் மாவட்டம்:** வடக்கு காந்தி கிராமம் முத்து நகரைச் சேர்ந்த வீரமணி மகள் நிரோஷா இவரை கரூர் அரசு கலைக்கல்லூரி புவியியல் மூன்றாமாண்டு மாணவர்கள் யுவராஜ், ரகுமான், சதிஷ், மாருதி ஆம்னி வேனில் கடத்தி பாலியல் பலாத்காரம் செய்ததாக பசுபதி போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 130. | 24.10.09 | **நாகப்பட்டிணம் மாவட்டம்:** வேட்டைக் காரணிருப்பு பகுதியைச் சேர்ந்தவர் பாலசுப்பிரமணியன் விவசாயி, இவருக்கும் காரைக்கால் அடுத்த போலகத்தைச் சேர்ந்த கலைச் செல்வன் மகள் கனிமொழிக்கும் கடந்த 21–ந்தேதி திருமணம் நடந்தது. திருமணம் முடிந்த சோகத்தில் கனிமொழி மணமகன் வீட்டில் வாஸ்மால் குடித்து தற்கொலை செய்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 131. | 24.10.09 | **கடலூர் மாவட்டம்:** டி.புனயூர் கிராமத்தைச் சேர்ந்தவர் கோமதுரை விவசாயி, இவரது மனைவி சுதா, இவருக்கு 2 மகன்கள் உள்ளனர், கணவன், மனைவியிடையே ஏற்பட்ட தகராறில் சுதா தன் இரண்டு மகன்களை குத்தி கொலை செய்து விட்டு தானும் தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து வேப்பூர் போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 132. | 25.10.09 | **வேலூர் மாவட்டம்:** திருப்பத்துறை அடுத்த கோணாப்பட்டு கிராமத்தில் 250க்கு மேற்பட்ட தலித் மக்கள் வசிக்கின்றனர். 15 ஆண்டுகள் போராடியும் இம்மக்களுக்கு மயான வசதியில்லை இந்நிலையில் சாமூடி மகன் ராஜா(40) என்பவர் இறந்துவிட்டார் புதைக்க சுடுகாடு இல்லாமல் அம்மக்கள் புதுபேட்டை சாலையில் பிணத்துடன் மறியாலில் ஈடுபட்டடனர். | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 133. | 25.10.09 | **கோவை மாவட்டம்:** கோவை அரசு மருத்துவ கல்லூரியில் தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த முத்துகுமார், ராமணா, கிருஷ்ணகிரியைச் சேர்ந்த லோகேஸ், சேலம் மேட்டுரைச் சேர்ந்த கார்த்திக், ஆகிய நான்கு மாணவர்கள் 3ம் ஆண்டு பயின்றனர், இவர்கள் மது அருந்திவிட்டு இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர்களை நிர்வாணப்படுத்தியும் அடித்து துன்புறுத்தியும் உள்ளனர். இது குறித்து காவல் துறையினர் விசாரனை நடத்தி வருகின்றனர். | பள்ளி வன்முறை | தீக்கதிர் |
| 134. | 26.10.09 | **நெல்லை மாவட்டம்:** ஏர்வாடி அருகே உள்ள கோதைசேரி நந்தகோபால் தெருவைச் சேர்ந்தவர் சுப்பையா, இவருடைய மனைவி பாலசரஸ்வதி(27), இவர் தன் தம்பிக்கு குழந்தை பிறந்ததால் பாலசரஸ்வதி நாங்குநேரி சென்று திரும்பும் வழியில் பாலசரஸ்வதி பாலியல் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | பாலத்காரம் செய்யப்பட்டு கொலை செய்துள்ளனர், இது குறித்து போலீஸார் விசாரணை செய்து வருகின்றனர். | | |
| 135. | 26.10.09 | **கோவை மாவட்டம்:** கோட்டைமேட்டை சேர்ந்தவர் இப்ராகிம்ஷா(30), இவருக்கும் அதே பகுதியைச் சேர்ந்த அப்துல்கபூர் மகள் நதீராபானு என்பவருக்கும் 11 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகள் உள்ளனர். கணவன் மனைவியிடையே ஏற்பட்ட தகராறில் இப்ராகிஷா மற்றும் அவரது தம்பி பெரோஸ் சேர்ந்து நதீராபானுவை அடித்து சித்திரவதை செய்து மொட்டை அடித்தனர். இது குறித்து உக்கடம் போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 136. | 26.10.09 | **மதுரை மாவட்டம்:** பெத்தானியாபுரத்தைச் சேர்ந்தவர் நாகராஜ் மகன் விக்னேஷ்வரன்(15), இவர் தனியார் பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வந்தார். இவர் பள்ளிக்கு செல்லாததால் பெற்றோர் திட்டினர் இதனால் மனமுடைந்து வீட்டில் தூக்குபோட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து கரிமேடு போலீஸில் புகார். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 137. | 26.10.09 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே உள்ள பாலார்பட்டி ஊரைச் சேர்ந்தவர் கருப்பையா, இதே பகுதியைச் சேர்ந்த காமாயி என்பவர் கணவரைப் பிரிந்து வாழ்ந்தார், காமாயி கருப்பையாவுடன் குடும்பம் நடத்துவதாக கூறப்படுகிறது. இந்நிலையில் இருவருக்கிடையே ஏற்பட்ட பிரச்சனையில் கருப்பையா காமாயியே எரித்து கொலை செய்ய முயன்றதாக உசிலம்பட்டி காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 138. | 26.10.09 | **மதுரை மாவட்டம்:** காஜிமார் தெரு பகுதியைச் சேர்ந்தவர் நாகூர்சேட் கொத்தனார் இவரது மனைவி ரம்ஜான்பேகம்(28), குடும்ப தகராரின் காரணமாக ரம்ஜான்பேகம் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 139. | 27.10.09 | **கன்னியாகுமரி மாவட்டம்:** குளச்சல் விகே.பி.தனியார் பள்ளி மாணவர்கள் முகேஷ், அசோக், நாஞ்சில், விக்னேஷ், ஆகிய மாணவர்கள் பள்ளி விட்டு விடு திரும்பும் வழியில் காரில் வந்த கும்பலால் கடத்தப்பட்டனர், அவர்களிடம் இருந்து தப்பி பரசேரி கம்யூனிஸ்ட் அலுவலகத்தில் தஞ்சம் புகுந்தனர். இது தொடர்பாக காவலர்கள் விசாரனை நடத்தி வருகின்றனர். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 140. | 27.10.09 | **மதுரை மாவட்டம்:** பொன்னகரத்தைச் சேர்ந்த ரங்கராஜ் மனைவி கலைச்செல்வி, இவரது கணவர் ரங்கராஜ் நகை கடை | காவல் நிலைய வன்முறை | தினமணி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | வைத்துள்ளார்., இவரை டிஸ்பி மாறன் மற்றும் போலீஸார்கள் திருட்டு நகைகள் கைபற்றல் பிரச்சனை 8 நாட்களாக சட்டவிரோத காவல் செய்து சித்திரவதை செய்வதாக மதுரை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்ததில், உயர் நீதிமன்றம் ஐ.ஜி விசாரிக்க உத்தரவு செய்துள்ளது. | | |
| 141. | 27.10.09 | **மதுரை மாவட்டம்:** ஆண்டாள்புரம் பகுதியைச் சேர்ந்தவர் யூனூஸ்கான் இவரது மகள் தயூப்(14) இவரது நணபர் சகாயம் இருவரும் பள்ளிக்கு தனியார் காரில் பள்ளி சென்று திரும்புவர், கார் டிரைவர் மற்றும் கிளினர் தங்களது செல்போனில் மாணவர்களை ஆபாச படம் பிடித்து வீட்டில் காட்டிவிடுவதாக கூறி மிரட்டி 7 பவுண் தங்க நகைகளை பறித்ததாக சுப்பிரமணிபுரம் போலீஸில் புகார். | மாணவர்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 142. | 27.10.09 | **தீண்டுக்கல் மாவட்டம்:** பழனி தொலைத் தொடர்புத் துறையில் சீனியர் அக்கவுண்டண்ட் ஆக ஏ.சவுந்திராஜன் பணிபுரிந்து இறந்தார். இவரது மனைவி நிர்மலா, நிர்மலாவிற்கு கருணை அடிப்படையில் பணி வழங்கப்பட்டு பழனி தொலைத் தொடர்புத்துறையில் பணியாற்றுகிறார் இங்கு மேல் அதிகாரிகளாக பணிபுரியும் அசன் என்பவர் நிர்மலாவிடம் பாலியல் தொல்லை கொடுத்து வந்துள்ளார். இது குறித்து உயர் அதிகாரிகளிடம் புகார் கொடுத்தும் நடவடிக்கை இல்லை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 143. | 27.10.09 | **சென்னை மாவட்டம்:** கும்மிடிப்பூண்டி அடுத்த தலையாரிப்பாளையம் கிராமத்தில் அரசினர் மேல் நிலைப்பள்ளியில் தூரப்பள்ளம் கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணி மகன் முத்துராஜ் 10ம் வகுப்பு படித்து வருகிறார். இவரிடம் பள்ளி நிர்வாகிகள் கூடுதல் கட்டணம் கேட்டதால் குடும்ப ஏழ்மை நிலை காரணமாக முத்துராஜ்வால் பணம் கட்ட இயலவில்லை இதனால் மனம் நொந்து முத்துராஜ் விஷம் குடித்து தற்கொலைக்கு முயற்சித்ததால் இது குறித்து ஆரம்பாக்கம் போலீஸில் புகார். | பள்ளி வன்முறை | மாலை மலர் |
| 144. | 28.10.09 | **சிவகங்கை மாவட்டம்:** காளையார்கோவில் மருது பாண்டியர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்த வந்தவர்கள் இடையே திடீர் மோதலில் போலீஸார் தடியடி நடத்தினர். | காவல் நிலைய வன்முறை | தினத்தந்தி |
| 145. | 28.10.09 | **மதுரை மாவட்டம்:** காருப்பாயூரணியை அடுத்த ஆண்டார் கொட்டாரத்தைச் சேர்ந்த பிச்சை இவருடையமகன் ராமகிருஷ்ணன் இவருக்கும் கார்த்திகை ஈஸ்வரி திருமணம் செய்து கொண்டனர்.கணவன் மனைவியிடையே ஏற்பட்ட தராறில் கணவர் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | தன் மனைவி மீது அம்மிகல்லை தூக்கி போட்டு கொலை செய்தும் தானும் தூக்குபோட்டு தற்கொலை செய்து கொர்டார். இது பற்றி போலீஸாா விசாரித்து வருகின்றனர். | | |
| 146. | 28.10.09 | **திருச்சி மாவட்டம்:** பெரிய மிளகுபாறையில் உள்ள அரசு பிசியோதெரபி கல்லூரியில் பரமத்தி வேலூரைச் சேர்ந்த பிரகாஷ், தர்மராஜ், அஜிம், படித்து வருகின்றனர். இவர்கள் அதே கல்லூரியில் படிக்கும் முதலாமாண்டு மாணவர் ஈரோட்டை சேர்ந்த சங்கரை ராகிங் செய்துள்ளனர் இது குறித்து கன்டோன்மெண்ட போலீஸில் புகார். | பள்ளி வன்முறை | தினமலர் |
| 147. | 28.10.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** நிலக்கோட்டை சிலுக்குவார் பட்டியைச் சேர்ந்த அருள்ரேகாவை, ஆசிரியர் ஜான்பீட்டர், பாலியல் பலாத்காரம் செய்தார், மற்றும் அருள் ரேகா குடும்பத்தினரை மிரட்டிய ஆசிரியர் ஜான்பீட்டர் மற்றும் அவரது குடுபத்தினரை, கைது செய்ய கலெக்டர் உத்தரவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 148. | 28.10.09 | **சென்னை மாவட்டம்:** அசோக்நகரை சேர்ந்த சீனிவாசனின் மகள் ஸ்ரீவித்யா(30), அபிராமபுரத்தைச் சேர்ந்த கார்த்திக் இவர் ஸ்ரீவித்யாவை திருமணம் செய்து கொள்வதாக கூடி ஏமாற்றியுள்ளார் இது குறித்து போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 149. | 29.10.09 | **மதுரை மாவட்டம்:** கே.புதுரைச் சேர்ந்தவர் நடராஜன், இவர் தனியார் பள்ளி வாகனத்தில் டிரைவராக பணியாற்றினார். இவர் மாரடைப்பால் உயிரிழந்தார், இதையொட்டி சமுக நலப்பாதுகாப்பு திட்டத்தின் தன் கணவர்க்கு கிடைக்கும் அரசு நிதியுதவி 10 ஆயிரம் பெற அவருடைய மனைவி சரவணம்மாள் சமூக நல அலுவலகத்தை அனுகியபோது லஞ்ச பணத்திற்காக 10,000 ரூபாய்க்கான காசோலை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. | லஞ்ச ஊழல் | தினத்தந்தி |
| 150. | 29.10.09 | **தேனி மாவட்டம்:** ஆண்டிப்பட்டி வட்டம் ராஜதானி கிராமம் சுந்தர்ராஜபுரத்தில் தாட்கோ மூலம் நிலம் இல்லாத மகளிர் 10 பேருக்கு 4 ஏக்கர் வீதம் கடமலைகுண்டு கிராமத்தில் விலைக்கு வாங்கபட்டு பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளது. பல மாதங்கள் கடந்தும். சர்வே செய்ய உரிய கட்டணம் செலுத்தியும் நிலத்தை பிரித்துக் கொடுக்காததால் கவலையடைந்த தலித்துக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பரிதாபமாக உக்கர்ந்திருந்தனர். | தலீத்களுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 151. | 29.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூர் தாகுனிபாறை அருகே வேட்ராயிருப்பு | காவல்நிலைய வன்முறை | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | பகுதியைச் சேர்ந்தவர் சின்ன சடயப்பன், இவரை ஸ்ரீவில்லிபுத்தூர் எல்லைக்குட்பட்ட காட்டுபிலாதுறை ரேஞ்சர் விசாரனை என்ற பெயரில் சட்டவிரோத காவலில் வைத்திருப்பதாகவும் சின்னசேடப்பன் வீடு திரும்பவில்லை | | |
| 152. | 30.10.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமேஸ்வரத்தில் இருந்து கச்சத்தீவு பகுதியில் மீனவர்கள் மீன் பிடிக்க சென்ற மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தி தமிழக மீனவர்களின் படகுகளை சேதப்படுத்தினர். | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 153. | 30.10.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** கொடைக்கானலில் கொத்தடிமைகளாக இருந்த நாகலாந்து மாநிலத்தைச் சேர்ந்த 7 பேர் மீட்கப்பட்ட திண்டுக்கல் அருணோதய குழந்தை தொழிலாளர் பாதுகாப்பு மையத்தில் வைப்பட்டுள்ளனர். கொத்தடிமைகளாக வைக்கப்பட்ட நடசத்திர விடுதி மீது நடவடிக்கை எடுப்பது குறித்து மாவட்ட ஆட்சியர் மா.வள்ளலாரிடம் புகார். | கொத்தடிமை | தினமணி |
| 154. | 30.10.09 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் இலவச கண் சிகிச்சை முகாமில் சிகிச்சை பெற்ற திருவண்ணாமலை மாவட்டத்தைச் அடுத்து மேல்சான்றோர் குப்பம் அடுத்த மணியாரகுப்பத்தை சேர்ந்த கமலாம்மாள்(80) அம்சா (55), மற்றும் ஆதிதிராவிடர் காலனியைச் சேர்ந்த அற்புதம், அமராவதி, அறுவை சிகிச்சைச் செய்தும் பார்வையற்றவர்காளாக உள்ளனர். திருவண்ணாமலை ஆஸ்பத்திரி மீது புகார். | | தினமணி |
| 155. | 30.10.09 | **மதுரை மாவட்டம்:** வாடிபட்டி அருகே நகரி பகுதியைச் சேர்ந்தவர் முனியாண்டி இவருடைய மகன் விஜய்ப்ரதீப் இவர் சென்னையில் உள்ள சட்டக் கல்லூரியில் 2ம் ஆண்டு படித்து வருகிறார். இவருடைய அக்கா மகன் சுமன் நகரில் உள்ள தனியார் பள்ளியில் படிக்கிறார் சம்பவத்தன்று சுமனை அவருடன் படிக்கும் மாணவர்கள் சிலர் தாக்கி உள்ளனர். இது குறித்து சுமன் தனது மாமாவிடம் தெரிவித்தார். விஜயப்ரதீப் அந்த சிறுவர், சிறுமியை 9 பேரை அரிவாள் கொண்டு தாக்கினார். இது குறித்து வாடிபட்டி காவல் நிலையத்தில் புகார். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 156. | 30.10.09 | **புதுக்கோட்டை மாவட்டம்:** அறந்தாங்கி அருகே கோட்டம் கல்லனை கால்வாய் நாகுடி பிரிவிலிருந்து கலக்கமங்கலம் வாய்காலில் குறைவாக தண்ணீர் வழங்காமல் 28 ஏரில் பாசனம் பகுதி விவசாயிகளை வஞ்சித்த நாகுடி பிரிவு உதவி செயற் பொறியாலர் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென | அரசு அன் கடமை செய்யாமை | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | வயியுறுத்தி, இந்த சாலை மறியல் நடைபெற்றது. | | |
| 157. | 31.10.09 | **வேலூர் மாவட்டம்:** உதயேந்திரத்தை சேர்ந்தவர் முருகவேணி இவரது மகள் காயத்ரி(34), இவருக்கும் சென்னை ஐ.சி.எப். ரயில் பெட்டி ஆலை ஊழியர் சுப்பையாவுக்கும் திருமணம் நடந்தது . காயத்ரி பிரசவத்துக்காக மருத்துவமனை சென்றபோது காயத்திரி மற்றும் சுப்பையாவிற்க்கு இரத்த பரிசோதனை செய்தபோது சுப்பையா AIDS நோயினால் பாதிக்கப்பட்டது. தெரிந்தவுடன் சுப்பையா தன் பிறந்த குழந்தைக்கு பாதரசம் கொடுத்து கொலை முயற்சி செய்ததாக வாணியம்பாடி போலீஸில் புகார். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 158. | 31.10.09 | **திருச்சி மாவட்டம்:** மணப்பாறை அருகே உள்ள சுக்கம்பட்டியைச் சேர்ந்தவர் ஆறுமுகம், இவர் பைக்கில் மணப்பாறையில் இருந்து சுக்கம்பட்டிக்கு செல்லும் வழியில் எதிரே பைக்கில் வந்த புத்தாநத்தத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் என்பவர் மீது பைக் மோதியது தொடர்பாக சொந்த ஜாமீனில் விட மாணப்பாறை காவல் நிலைய எஸ்.ஐ.ராஜரத்தினம்--- ரூ1500 லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸாரால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினகரன் |
| 159. | 31.10.09 | **மதுரை மாவட்டம்:** சிவகங்கை மாவட்டம் நாச்சியார்புரத்தைச் சேர்ந்தவர் ஜாகிர் தன் குடும்பத்துடன் காரில் சென்றபோது ஏற்பட்ட விபத்தில் ஜாஷிகா(3) தவிர மற்ற அனைவரும் இறந்துவிட்டனர், ஜாஷிகா படுகாயம் அடைந்த நிலையில் மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்காமல் இறந்து விட்டார், இது குறித்து ஜாகீர் உறவினர்கள் மருத்துவமனையின் டீன் சிவகுமாரிடம் புகார் கொடுத்ததின் பெயரில் சம்பந்தப்பட்ட டாக்டர் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளார். | அரசு ஊழியர் அலட்சிய போக்கு | தினகரன் |
| 160. | 31.10.09 | **மதுரை மாவட்டம்:** கீழவாடியைச் சேர்ந்த சொக்கன் மகன் சரவணன்(20), இவரை திருடியதாக சந்தேகப்பட்டு சூரமங்கலம் காவல் நிலைய காவலர் சித்திரவதை செய்ததாக மதுரை மருத்துவமனை காவலர்களிடம் புகார். | காவல் நிலைய வன்முறை | தினகரன் |
| 161. | 31.10.09 | **மதுரை மாவட்டம்:** ஒத்தக்கடை அருகே உள்ள ஆமூரை சேர்ந்தவர் மூர்த்தி, இவரது உறவினர்கள் 6 பேர் சேர்ந்து கருத்தபுளியம்பட்டி கண்மாயில் சட்டவிரோதமாக மணல் அள்ளினர், இது குறித்து காசில்தார் சிராஜ்தீன் புகாரின் பேரில் 6 பேர் மீது மேலூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். | மணல் கடத்தல் | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 162. | 31.10.09 | **புதுச்சேரி மாவட்டம்:** புதுச்சேரி அடுத்த வில்லியனூர் அருகே உள்ள மணக்குப்பத்தைச் சேர்ந்தவர் வெங்கடேசன் இவரது மகன் ஸ்ரீதர்(16), இவர் வில்லியனூர் விவேகானந்தா அரசு மேல் நிலைப் பள்ளியில் பிளஸ் 1 கம்யூட்டர் சயின்ஸ் படிக்கிறார். இவரை பிளஸ்1 மாணவர்கள் ஐந்து பேர் கூட்டாகச் சேர்ந்து வகுப்பறைக்கு சென்ற ஸ்ரீதரை வழிமறித்து மாணவனை நீர்வாணமாக்கி ராகிங் செய்ததாக பாதிக்கப்பட்ட ஸ்ரீதரின் பெற்றோர் பொது சுகாதாரதுறை அமைச்சர் நமச்சிவாயம் அவர்களிடம் புகார். | பள்ளி வன்முறை | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்